செய்தி வெளியீடு எண்– 733 நாள்–8.9.2008

# 4150 கோடி ரூபாய் முதலீட்டில் வணிக வாகனங்கள் தயாரிக்கும் புதிய தொழில் திட்டங்கள்

# தமிழக அரசு அசோக் லேலண்டு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் கையெழுத்து!

வணிக வாகனங்கள் தயாரிப்பில் இந்தியாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய நிறுவனமாக விளங்கும் அசோக் லேலண்டு நிறுவனம் சென்னைக்கு அருகில் எண்ணூரில் அமைந்துள்ள முதன்மைத் தொழிற்சாலையுடன், ஒசூரில் இரண்டு ஆலைகள், இராஜஸ்தான் மாநிலம் ஆல்வாரில் ஒன்று, மராட்டிய மாநிலம் பந்தாராவில் ஒன்று என மொத்தம் ஐந்து உற்பத்தித் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது.

இந்நிறுவனம் உலகின் அனைத்துப் பெரிய சந்தைகளிலும் இடம் பெற்றுள்ள, பயணிகளுக்கான சொகுசுக் கார், குடும்பங்களுக்கான கார், விளையாட்டுப் போட்டிகளுக்கான கார், விளையாட்டுப் போட்டிகளுக்குப் பயன்படும் பிற வாகனங்கள், இலகுரக வணிக வாகனங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த நிசான் மோட்டார்ஸ் நிறுவனத்துடன் சேர்ந்து ஆண்டுக்கு ஒரு இலட்சத்து 90 ஆயிரம் வாகனங்களைத் தயாரிக்கும் திறன்கொண்ட இலகுரக வணிக வாகனத் திட்டத்தை மூன்று கூட்டு முயற்சி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

மேலும், ஆண்டுக்கு ஒரு இலட்சம் வாகனங்களைத் தயாரிக்கும் உற்பத்தித் திறனுடன் நடுத்தர ரக மற்றும் கனரக வணிக வாகனங்கள் திட்டத்தைத் தன் சொந்தத் திட்டமாகச் செயல்படுத்தவும் அசோக் லேலண்டு நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

அசோக் லேலண்டு நிறுவனத்தால் திட்டமிடப்பட்டுள்ள இந்த இரண்டு திட்டங்களும் ஒருங்கிணைந்த மோட்டார் வாகனத் திட்டத்திற்கான அனைத்து உட்கூறுகளையும் கொண்டிருக்கும். எண்ணூர், ஒசூர், பிள்ளைப்பாக்கம் போன்ற ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் 4150 கோடி ரூபாய் முதலீட்டில் அமையவிருக்கும் இத்திட்டங்கள் முழு திறனுடனும் செயல்படும்பொழுது 4500 பேருக்கு நேரடியாகவும், ஏறத்தாழ 13 ஆயிரத்து 500 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளை வழங்கும்.

இத்தொழிற்சாலை மூலம் கிடைக்கும் முதலீடு அசோக்லேலண்டு மற்றும் நிசான் நிறுவனங்கள் மூலம் தமிழகத்திற்கு வந்துள்ள மிகப் பெரிய முதலீடாகும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் இன்று (8.9.2008) நடைபெற்ற இத்தொழிற்சாலைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. எம்.எஃப். பாரூகி, இ.ஆ.ப. அவர்களும், அசோக் லேலண்டு நிறுவனம் சார்பாக அந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. சேஷசாயி அவர்களும், நிசான் நிறுவனம் சார்பாக அந்நிறுவனத்தின் துணைத் தலைவர் திரு. ஆன்ட்ரூ பால்மர் அவர்களும் கையெழுத்திட்டனர்.

அசோக் லேலண்டு மற்றும் நிசான் நிறுவனங்களால் அமைக்கப்படவுள்ள இந்தத் திட்டங்களுடன் ஏற்கனவே, தனது உற்பத்தி வசதிகளை பெரிய அளவில் விரிவாக்கம் செய்து வரும் ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனம், ஃப்ரான்ஸ் நாட்டைச் சார்ந்த ரெனால் நிறுவனமும் ஜப்பான் நாட்டைச் சார்ந்த நிசான் நிறுவனமும் இணைந்து ஒரகடம் தொழிற் பூங்காவில் உருவாக்கிடும் ஒருங்கிணைந்த மோட்டார் வாகனத் திட்டம், ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த டெய்ம்லர் நிறுவனமும் இந்தியாவைச் சார்ந்த ஹீரோ நிறுவனமும் இணைந்து சிப்காட் ஒரகடம் தொழிற் பூங்காவில் அமைத்துவரும் வணிக வாகனங்கள் திட்டம் ஆகிய அனைத்தும் சீருந்துகள் உள்ளிட்ட வணிக வாகனங்கள் தயாரிப்பில் சென்னைக்கு மேலும்மேலும் சிறப்புகளைச் சேர்க்கும் என்பது உறுதியாகிறது.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகத்தின் (SIPCOT) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.என். கோவிந்தன், இ.ஆ.ப., தொழில்துறை சிறப்புச் செயலாளர் திரு. தீரஜ்குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வழிகாட்டி அமைப்பின் இயக்குநர் திரு. எம். வேல்முருகன், அசோக் லேலண்டு நிறுவனத்தின் சார்பாக திரு.ஜி.பி. இந்துஜா, திரு.டி.ஜி. இந்துஜா, டாக்டர் வி. சுமந்திரன், திரு.கே. ஸ்ரீதரன் ஆகியோரும் நிசான் நிறுவனத்தின் சார்பாக திரு. தகாஷி டெராடா மற்றும் திரு. நகாடா ஆகியோரும் உடனிருந்தனர்.

***

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.